**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**அசல் வழக்கு எண். 3/2021**

**வா.சா.**2

நாள்: **26.08.2021**

2021ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு. குணசேகரன் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி திரு.ஆர்.சண்முகசுந்தரம், பி.காம்., எல்.எல்.பி., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. குணசேகரன் |
| த/பெ / க/பெ | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| ஜாதி | | |
| மதம் | : | |
| வயது | : | |
| தேதி | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவறை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் அடிப்படையில் அதில் கோரியுள்ள ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க முன்னிலையாகி உள்ளேன்.

இராமநாதபுரம் வட்டம், நாகாச்சி குரூப், கீழநாகாச்சி கிராமத்தில் புலஎண் 99/3, 94/4, 121/4 மற்றும் 121/1ஏ ஆகியவற்றிற்குரிய எஸ்எல் ஆர் அசல் பதிவேடு கொண்டு வந்துள்ளேன். மேற்சொன்ன புலஎண்களின் எஸ்எல்ஆர் நகல் சா.சா.ஆ.1 அசலுடன் ஒப்பிடப்பட்டது. மேற்சொன்ன புலன்எண்களுக்குரிய செட்டில்மென்ட் "அ" பதிவேடு அசல் கொண்டு வந்துள்ளேன். அதன் புகைப்பட நகல் சா.சா.ஆ.2. அசலுடன் ஒப்பிடப்பட்டது. சா.சா.ஆ.1ல் மேற்சொன்ன புல எண்களுக்கு குமராண்டிதேவர் மக்கள் நாகுதேவர், காளிமுத்து, நாகரத்தினம், ராமசாமி, முனியாண்டி ஆகியோர்கள் பெயர்கள் பட்டாதாரர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. புலஎண் 99/3, பட்டா எண்.163 நாகுதேவர் இன்னும் 4 பேர்கள் என்ற பெயரிலும், புலஎண் 94/4 பட்டா எண். 158க்கு நாகுதேவர் இன்னும் 4 பேர்கள் எனவும், புல எண் 121/4 மற்றும் 121/1ஏ ஆகிய புல எண்கள் பட்டா எண். 163 நாகுதேவர் இன்னும் 4 பேர்கள் எனவும் பதிவாகியுள்ளது. மேற்சொன்ன அ பதிவேடு 1957ம் வருடத்தில் ஏற்படுத்தப்பட்டது. சா.சா.ஆ.1 எஸ்எல்ஆர் பதிவேடு 1953ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது.